**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.295/2017**

2025–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.07.2025 | தகப்பனார் பெயர்: | சம்மந்தம் |
| பெயர்: | ராஜேந்திரன் (PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | வழுதலைக்குடி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 63/2025 |

**3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 01.07.2025**

1. தாவா 2 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி எனது தகப்பனாருக்கு கிடைத்தது என்றால் சில சொத்துக்கள் மட்டுமே கிடைக்க பெற்றது. சில சொத்துக்கள் கிரயம்ய பெறப்பட்டது. தாவா 2–வது அயிட்ட சொத்து நில உச்ச வரம்பு சட்டத்தின்படி எனது தந்தைக்கு கிடைக்கபெற்ற ஆவணம்தான் வா.சா.ஆ.3 என்றால் சரிதான். தாவா 3 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் நில உச்ச வரம்பு சட்டதின்படி எனது தந்தைக்கு கிடைக்கபெற்ற ஆவணம்தான் வா.சா.ஆ.6 என்றால் சரிதான். அனால் வழக்கிற்காக எனது தந்தை கிரயம் பெந்ற சொத்து என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆனால் தாவா 2 முதல் 6 அயிட்ட சொததுக்களுக்கு அரசுக்கு செலுத்துவேண்டிய கிரய தவனைத்தொகை நான் தான் செலுத்தினேன். வருடம் நியாபகம் இல்லை. ஆனால் எனது தந்தை இறந்த பிறகு தான் செலுத்தினேன். அவ்வாறு செலுத்தியதற்கான தீர்வை சான்று என்னிடம் இருக்கிறாதா என்றால் இல்லை.

2. தாவா 2 முதல் 6அயிட்ட சொத்துக்கள் நில உச்ச வரமப்பு சட்டத்தின் கீழ கொடுக்கப்பட்டதால் அதற்கான முழு தீர்வை செலுத்தியபிற்குதான் எனது தந்தையார் சம்மந்ததிற்கு முழு உரிமை கிடைக்கும் என்றால் சரிதான். அதற்கான தீர்வை முழுவதுமாக கட்டாததால் தந்தை சம்மந்ததிற்கு முழு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எனது தந்தை 21.04.2003 (சரியாக நியாபகம் இல்லை.) எனக்கு உயில் எழுதி வைத்துள்ளார் அதை பொறுத்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 தான் எனது தந்தை எழுதி வைத்த உயில் என்றால் சரிதான். மேற்படி உயிலில் எழுதப்பட்ட வாசகங்கள் இங்க் பேனாவில் எழுதப்பட்டுள்ளது என்றாலும் கையெழுத்து பந்துமுனை பேனாவினால் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

3. மேற்படி உயிலில் எனக்கு சுயஜரிதாமாக சம்பாத்தித்து தேடப்பட்ட நஞ்சை, புஞ்சை நிலங்கள் என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் எனக்கு சீலிங் மூலம் கிடைக்கபெற்ற சொத்து என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி உயிலில் சொத்து விபரம் என்ற காலம் இல்லை என்றாலும் உயிலில் சொத்து என்ற ஒன்று எழுதப்படவில்லை என்றாலும் சரிதான். அதனால் இந்த வழக்கு சொத்துக்கள் எனது தந்தை எனக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என கூற முடியாது என்றால் சரியல்ல. அதனால் இந்த உயில் படி வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என கோரமுடியாது என்றால் சரியல்ல. இந்த உயிலில் எனது சொத்துக்கள் என குறிபிடப்பட்டுள்ளதே தவிர அவை எப்படி பெற்ப்பட்டது என்ற விபரம் அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 எனது தந்தையால் எழுதப்படவில்லை அது போர்ஜரியாக தயாரிக்க்பபட்டது என்றால் சரியல்ல. எனது தந்தையார் மனுப்பூர்வமாக உயில் எழுதி வைத்திருந்தால் முழு சொத்து விபரத்தையும் கூறியிருப்பார் அவ்வாறுஎழுதவில்லை என்பதால்தான் சொத்து விபரம் கூறவில்லை என்றால் சரியல்ல.

4. 2 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் எனது தகப்பனாருக்கு கிடைக்கப்பெற்றது. முழு கிரய பாக்கி தொகையும் செலுத்தாததால் இந்த உயிலை எழுதி வைக்க அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது சகோதரர் 3-ம் பிரதிவாதியுடன் கூட்டு அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது தந்தை இறப்பிற்கு பிறகு 3-ம் பிரதிவாதி ஒரு பாகஸ்தர் என்பதால் அவருக்கு ஒரு பாக வீதம் கிடைக் கூடியது என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதிக்கு பாகம் ஒதுக்ககூடாது என்பதாற்காக நான் மற்ற பிரதிவாதிகளுடன் ஒன்று சேர்ந்து போர்ஜயிாக இந்த உயிலை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் உள்ள ஊரில் தனக்கென்று தனி சொத்துக்க்ள உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களுக்கான ஆவணம்தான் வா.சா.ஆ.14, வா.சா.ஆ.15, வா.சா.ஆ.16 என்றால் சரியல்ல.

5. அதனால் உயில் படி நான்தான் சொத்தின் உரிமையாளர் என்றும், வழக்கு சொத்தை அனுபவிப்பதை இடையூறு செய்யக்கூடாது என்றும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் சொத்தை அனுபவிப்பதை 3-ம் பிரதிவாதி இடையூறு செய்வதாக கூறுவபோல் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி இடையூறு செய்தது சம்மந்தமாக காவல் துறையில் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் உண்மையிலேயே அப்படி சம்பவம் நடந்திருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றும் அவ்வாறுநடைபெறாததால் தான் புகார்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரம்எதுவும் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

3–ம் பிரதிவாதியை பொறுத்து அவரும் ஒரு பாகஸ்தர் என்பதால் விளம்புகை பரிகாரமோ, உறுத்துக்கட்டளை பரிகாரமோ அவருக்கு எதிராக பெற முடியாது என்றால் சரியல்ல.

<u>**3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**</u>